# Chapter XXIII code of Criminal procedure

## DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR

## DEPOSITION OF WITNESS

**Calender** :
**Miscellaneous** : **CC.No.705/2024**
**Preliminary Register** :
**Police Station** : **Semmencherry PS**

**Lw1/Pw1**

**Deposition of witness for** :
:

**Name** : **Sudhakar**
:**S/o. Pandi**

:
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.05.2025.**
**(எதிரகள் ஆஜர் , எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் தற்பொழுது D-1 திருவல்லிக்கேணி குற்ற பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.02.2021 அன்று ஜே-10 செம்மஞ்சேரியில் தலைமைக் காவலராக பணியில் இருந்தபொழுது என்னுடன் தலைரமைக் காவலர் செந்தில்வேல், உதவி ஆய்வாளர் ஐயப்பன் ஆகியோர்களுடன் 12 மணிக்கு உதவி ஆய்வாளர் ஐயப்பன் அவர்களுக்கு ரகசிய தகவலின் அடிப்படையில் செம்மஞ்சேரியில் (பின்பு சாட்சியை APP செம்மஞ்சரேியா என்று கேட்டபொழுது சாட்சி சோழிங்கநல்லூர் என்று சாட்சியளித்தார்.) உள்ள எலன்சர்மா பள்ளியின் அருகில் புகையிலை பொருட்கள் விற்பதாக கிடைத்ததகவலை

அறிந்து அங்கு சென்று பார்த்தபோது TN14R1057 என்ற காரில் புகையிலை பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். நாங்கள் வாகனம் அருகில் சென்று மடக்கிய போது விக்னேஸ் என்பவர் எங்களை வெளியே விடுங்கள் இல்லை என்றால் காரை ஏற்றி கொன்று விடுவதாக மிரட்டினார். முன் சீட்டில் இருந்த முரளிதரன் என்பவர் வாகனத்தை ஸ்டார்ட் செய்து ஏற்றுவதற்கு முற்பட்டபோது வாகனம் நின்று விட்டது. நாங்கள் உடனடியாக மடக்கி பிடித்து தக்க காரணம் சொல்லி அவர்களை கைது செய்து சுமார் 300 கிலோ புகையிலை பொருட்களுடன், ரூ.500 உடன் கைப்பற்றி அங்கு பொதுமக்கள் இல்லாத காரணத்தால் சாட்சிகள் முன்வராத காரணத்தால் உதவி ஆய்வாளர் என்னையும் தலைமை காவலர் செந்தில்வேலையும் சாட்சிகளாக முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று மகஜரில் கைப்பற்றினார். பின்பு வழக்கு சொத்துகளையும் எதிரிகளையும் காவல் நிலையம் அழைத்து வந்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தோம். ஆய்வாளர் எங்களை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை .**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**மறுவிசாரணை .** இல்லை

Sd/-M.N.Rajanandhivarmasiva
District Munsif cum
Judicial Magistrate
Sholinganllur